தெல்லிப்பழை துர்க்காதேவி

# ஆலயம் மீது விமானத் தாக்குதல்: பக்தர்கள் இருவர் பலி; பலர் படுகாயம்!


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 84 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 19 இதழ் 111
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை (1 — 06 — 1992)


(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் நேற்று விமானத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலின்போது பக்தர்கள் இருவர் கொல்லப் பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

தெல்லிப்பழை துர்க்கா

[4ம் பக்கம் பார்க்க]

## இந்துசமய பேரவை அதிர்ச்சி, கவலை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைதுர்க்காதேவி தேவஸ்தானமும், தேவஸ் தானத்துடன் இணைந்த மண் டபங்களும் அனைத்தை இல்ல மும் நேற்று விமானப்படை யால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலினால் சேத மடைந்தமை குறித்தும், வழி

(4ம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கில் ராணுவத்தை வழிமறித்து தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன், மாவிட்டபுரம், தச்சன்காட்டு பகுதியிலிருந்து தெல்லிப்பழை நோக்கி நேற்று ஸ்ரீலங்காபடையினர் முன்னேறமுற்பட்டபோது விடு தலைப்புலிகள் வழிமறித்து உக் கிரத் தாக்குதல்களை மேற் கொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

★ வலி வடக்கு மோதல்:

# இராணுவ உயர் அதிகாரிகள் புலிகளின் தாக்குதலில் பலி!

(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் கடும் மோதலில் இராணுவத் தரப்பில் நான்கு உயரதிகாரிகள் உயிரிழந்தனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ...ருவது அணியின் இரண் ...து தளபதியான சூரிய ...நாயக்கா இராணுவத் தரப்பில் பலியான ஒரு முக் கிய அதிகாரி என தெரிவிக்கப் பட்டது.

இந்த அதிகாரிகள் விடுத லைப் புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்டதையடுத்தே இராணுவத்தினர் கடந்த 2 நாட்களாக தெல்லிப்பளை, சுன்னாகம் பகுதிகளில் கண் மூடித்தனமான விமானத் தாக்குதலையும் மற்றும் யாழ் நகர் மது மண்டைதீவு, காரை நகர் முகாம்களிலிருந்து சர மாரியான ஷெல் தாக்குதலை யும் மேற்கொண்டிருக்கலாம் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க)

முல்லையில்

## இராணுவம் புலிகள் கடும்சமர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இரா ணுவத்துக்குமிடையில் நேற்று முன்தினம் கடுமோதல்கள் ஆரம்பமானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து இராணுவத் தினர் பாரிய கவச வாகனங் களுடனும் விமானப்படையி னரின் உதவியுடனும் முன்

(4ம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக் கப்பட்டுள்ளதாக நேற்று அர சாங்கம் அறிவித்துள்ளது. (வி)

### இரத்த வங்கி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கி இரத்தம் தேவையென அறிவித்துள் ளது.

இரத்ததானம்செய்யவிரும்பு வோர் உடன் தொடர்பு கொள்ளுமாறு இரத்த வங்கி கேட்டுள்ளது. [56]

## இறந்த சிப்பாய்களின் உடல்கள் அ'புரத்துக்கு

(கொழும்பு)

கட்டுவன், வீமன்காமம், மாவிட்டபுரம் பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் நடை பெறும் கடும் மோதல்களில் இறந்த இராணுவச் சிப்பாய் களின் சடலங்களும், காயம் அடைந்த சிப்பாய்களும் முத லில் அநுராதபுரத்திற்குக் கொண்டு வரப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுப் பிற்பகல் 2 மணி யளவில், கோண்டாவில் மேற்கு, தாவடிப் பகுதிகளை வட்டமிட்ட ஹெலிகொப்டர் ஒன்று, அப்பகுதியில் இருந்த மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இதில் இருவர் காயப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## 60 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு முழுவதும் நேற்றும் விமானக்குண்டுவீச் சுத் தாக்குதல்களும், படை முகாம்களிலிருந்து அகோர ஷெல் தாக்குதல்களும், ஹெலி யிலிருந்து 50 கலிபர் தாக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தீர்வு வெற்றியளிக்காது

— வவுனியா தேரர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நிலவும் பிரச்னைக்கு இராணுவரீதியில் தீர்வு காணமுடியாது என்றும் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதன் மூலமே இனப்பிரச்னைக்கு நிலையான தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்றும் வவுனியா பிரதமகுரு ...ங்கைக்குரிய சியம்பலகஸ் ...வ விமலசாரதேரோ தெரி வித்துள்ளார்.

வவுனியாவில் அண்மையில் ...பெற்ற ஜனாதிபதி இடம் ...ர் செயலமர்வு நிகழ்ச்சி ... இலங்கை ஒலிபரப்புக் ...த்தாபனத்திற்கு வழங் ...பேட்டியிலேயே அவர் ...வாறு தெரிவித்துள்ளார். அப்பேட்டியில் அவர்மேலும் ...ரிவிக்கையில்; வட-கிழக் ...ட் பிரச்னைத் தீர்வு குறித்து ஜனாதிபதி மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் சகல ரும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். (க)

## முப்படைத் தளபதிகளும் களத்தில்

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று நாட்களாக யாழ். குடா மீது பரவலாக மேற்கொள்ளப்படும் ராணுவ தாக்குதல்களை முப்படைத் தளபதிகளும் நேரில் நின்று நெறிப்படுத்துவதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரத்ன, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ, விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன ஆகி யோர் வடபகுதியிலுள்ளபகுதி பொறுப்பாளர்களுடன் இணைந்து தாக்குதல்களைக் கவ னித்து வருவதாக இராணுவ தலைமைப்பீடம் தெரிவித்துள் ளது. (கே)

## விமானங்கள் அனர்த்தம் ஆலயங்கள், வீடுகள் சேதம்

(காங்கேசன்துறை)

வலி வடக்கில் நேற்று மேற் கொள்ளப்பட்ட அகோர விமா னத்தாக்குதலால் ஆலயங்கள், வீடுகள், கட்டிடங்கள், வர்த் தக நிலையங்கள்என்பனபெரும் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 8 மணியள வில் மாறி மாறி வந்த ஹெலி கள் தெல்லிப்பளையிலிருந்து சுன்னாகம் வரையானபகுதியை நோக்கி சரமாரியான கலிபர் தாக்குதலை நடத்தின.

இடைவிடாது வீதிகளைக் கண்காணித்துநடாத்தப்பட்ட தாக்குதலால் சுன்னாகத்துக்கு அப்பால் காலையில் இருந்து போக்குவரத்தும் தடைப்பட்டு

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை 5-00 மணியளவில் மண்டைதீவில் நிலைகொண்டிருந்த இராணு வத்தினர் யாழ். நகர் மீது திடீ ரென மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களினால், பாஷை யூர், குருநகர்ப் பொதுமக்கள பெருமளவில் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், தேவால யங்களிலும் தஞ்சம் புகுந்த

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவும், மாணவர்களுக்கு விசேட சலுகையும்வழங்கப்படும். 'சோபிதா' புத்தகசாலை. இல. 363, காங்கேசன்துறை வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (எ-2106)

### CONSTRUCTION CONTRACTORS

Construction Contractors from the districts Jaffna, Kiinochchi, Mullaitivu & Mannar affected by the stoppage of their Contracts with the state since July 1990 are advised to Contact early. Kanagsco Developments, Builders Consultants, 639, Navalar Road, Nallur, Jaffna. (C 6371)

### நாடகநூல்கள்

200க்கும் அதிகமான வானொலி நாடகங்களும், 22 மேடை நாடகங்களும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள். கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- 19 நாடகங்கள். (சி-6370)


## பீரங்கி தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

கீரிமலை - சேந்தான்குளம் கடல் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் கடற்படையினரால் கரையோரப் பகுதிகளை நோக்கி அடிக்கடி பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இளவாலை போயிட்டி என்னுமிடத்தைச் சேர்ந்த வீடு ஒன்றில் கடற்படையினரால் ஏவப்பட்ட பீரங்கி விழுந்து வெடித்ததில் திருமதி புஷபராணி செபஸ்தியாம்பிள்ளை என்பவர் காயமடைந்தார். (72)

## இன்று உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

'திருமலை நட்சத்திரங்கள்' நடாத்தும் 7 பேர்கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாம் அரை இறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இவ் அரையிறுதி ஆட்டத்தில நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீஸ் அணி மோதும். இதற்கு முன் 3 மணிக்கு நடைபெறும் சண்காட்சி உதைபந்தாட்டத்தில் திருமலை நட்சத்திரங்கள் அணி யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அணியுடன் மோதும். (ஓ)

## மெய்வல்லுநர் போட்டி அம்பனைக் கொத்தணி தொடர்ந்து சாதனை

(யாழ்ப்பாணம்)

சுளிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் கடந்த 27ம் திகதி நடைபெற்ற பண்டத்தரிப்பு கோட்டக் கொத்தணிகளுக்கிடையேயான மெய்வல்லுனர் போட்டியில் அம்பனைக்கொத்தணி 302 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

தொடர்ந்து நான்காவது முறை அம்பனை கொத்தணி முதலாம் இடத்தைப்பெற்று சாதனையுரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மகாஜன கல்லூரி மாணவர்கள் செல்வன் எஸ் திலகராஜ், செல்வன் எஸ் சுகிர்தன் ஆகியோர் சாம்பியன்களாக தெரிவகினார்கள்.

அம்பனை கொத்தணியின் வெற்றிக்கு மகாஜனக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் ம. வி, கீரிமலை நகுலேஸ்வரா ம. வி. மாணவிகள் ஒன்றிணைந்து செயற்பட்டதும், குறிப்பிடத்தக்கது. (சி-139)

## இன்று

(யாழ்ப்பாணம்)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தினுல் நாதஸ்வர மேதை திரு எம். பஞ்சாபிகேசனுக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் இன்று 1ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் தலைமையில் பாராட்டு விழா நடைபெறும்.

0 0 0

(உடுப்பிட்டி)

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று 1-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (150)

## கொத்தலாவல காலமானர்

(கொழும்பு)

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜே. சி. ரி. கொத்தலாவல நேற்று முன்தினம் காலமானர்.

இவர் பதுளை நாடாளுமன்ற உறுப்பினராகவும், இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவராகவும் முன்பு பணிபுரிந்துள்ளார். இவர் 1975-1977 வரை இலங்கை போக்குவரத்து சபையின் தலைவராகவும் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## பரீட்சை ஒழுங்குகள்

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை 1992க்கான பரீட்சை நிலையங்கள் ஒதுக்கீடுகள் சம்பந்தமாக யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை க. பொ. த. உயர்தரம் 91க்கான விடைத்தாள்கள் திருத்தும் வேலை

## அபிவிருத்தி சங்கங்கள் புனரமைப்பு

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களும் மாதர் கிராம அபிவித்திச் சங்கங்களும் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான அண்மையில் வெளியிடப்பட்ட புதிய உப விதிகள் இன்னும் தங்கள் அலுவலகத்திற்கு வந்துசேரவில்லை என்றும், இந்த உப விதிகள் கிடைத்ததும் இச்சங்கள் புனரமைப்பு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுறது. (72)

## புலமைப்பரிசில் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை 1992க்கான விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி ஜூன் மாதம் 30ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்கள் பாடசாலைகளுக்கு யாழ். கல்வித்திணைக்களத்திஞல் விரைவில் அறிவிக்கப்படும் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [சு)

கொழும்பில் கடந்த 27ம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருவதாக யாழ். கல்விப்பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் தெரிவித்தார். (சு)


## வொண்டலைற் சலவைப் பவுடர்

யாழ்ப்பாண நீருக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டது.

வொண்டலைற் சோப்பவுடர் மட்டுமே!

எம்மிடம்

தலையணைப் பஞ்சு - நுளம்புத்திரி

இவைகளை

மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு கொடுக்கப்படும்.

புஸ்பா அன் கம்பனி,

293, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்.

(எ-2179)


## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டத்தில் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களுக்கும், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து இயக்குநர்களும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களும் தவறாது வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

## முல்லையில் மீனவர் மீது தாக்குதல் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வலையன் மடம் கடற்பரப்பில் கடந்த வியாழக்கிழமை 11 மணியளவில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர் படகினை நோக்கி கடற்கரையில் வந்துகொண்டிருந்த கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்

இத்தாக்குதலில் மீன்பிடிப் படகிலிருந்தவர்களில மூவர் படுகாயமடைந்த நிலையில் தப்பிவந்தனர். படகு கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

வைரய்யா சந்தசாமி (31-வயது, புத்தளம்), ஆண்டியப்பன் நல்லநாதன் (32-வயது, உடப்பு, புத்தளம்), சம்மாட்டி கதிர்காமு (2-வயது, புத்தளம் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (56)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

அருளம்மா அந்தோனிப்பிள்ளை

தோற்றம்: 16 - 05 - 1921

மறைவு: 01 - 6 - 1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எங்களை எல்லாம் இந்நிலைக்கு ஆளாக்கிய அம்மா! ஆண்டுகள் மூன்றானாலும் உங்கள் மறைவை மறக்கமுடியாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:

கணவன், பிள்ளைகள்,

மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 10, மத்தியூஸ் வீதி,

யாழ்ப்பாணம். (சி-6339)

## இராசிபலன்

01 06 - 1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு வைகாசி 19)

அமாவாசை மு. ப. 10-10 வரை. ரோகினி மு. இ 8-55 வரை அமிர்தயோகம் இராகு காலம் காலை 7-22 முதல் 8-52 வரை சுபநேரம் காலை 11-52 முதல் 1-52வரை.

மேஷம்: புத்திரர் விரோதம். பணசெலவு, மனச்சுமை.

இடபம்: ஜனசேர்க்கை, சத்ருஜயம், காரியசித்தி.

மிதுனம்: தொழில் கஷ்டம். குடும்ப சஞ்சலம், வேதனை.

கடகம்: அதிகாரம், மனமகிழ்ச்சி. இனசன வருகை.

சிங்கம்: சுபகாரியம். வசதியான மாற்றம். பணவரவு.

கன்னி: இறை உணர்வு. அயலவர் சச்சரவு, காரிய தாமதம்.

துலாம்: அடிமை நிலை. ஆணவபோக்கு, அலைச்சல்.

விருச்சிகம்: உயர்ந்த புகழ், பெண் லாபம். குடும்ப சுகம்.

தனுசு; தொழில் சிறப்பு, பணமுடை, மனப்போராட்டம்.

மகரம்; அதிகாரிகள் சஞ்சலம், வேலைப்பளு, கவலை.

கும்பம்: பிதா துன்பம், கெட்ட கனவு, பயணக்கஷ்டம்.

மீனம்: காரிய விக்கினம், குடும்ப பிரிவு. வாக்கு கலகம்.

— ஜோஸ்யர்

## இசைமாலை நிகழ்ச்சி

எதிர்வரும் 15.06.92 முதல் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

செஞ்சோலைக்குழந்தைகளும், போராளிகளும் இணைந்து வழங்கும்

சப்தஸ்வராவின்

"இசை மாலை"

நிகழ்ச்சி

நிகழ்ச்சி பின்வரும் இடங்களில் நடைபெறும்

இராமநாதன் கல்லூரி - மருதனுமடம், சென்ஜோன்ஸ் கல்லூரி - சுண்டுக்குளி, கைலாசபதி கலை அரங்கு - யாழ். பல்கலைக்கழகம், காசிப்பிள்ளை அரங்கு - அரியாலை, இந்துக்கல்லூரி - சாவகச்சேரி, மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு, ஸ்கந்தவரோதயா கல்லூரி - கந்தரோடை, சைவப்பிரகாச வித்தியாசாலை - உரும்பிராய், சிவப்பிரகாச வித்தியாசாலை - சங்கானை திருநாவுக்கரசு வித்தியாலயம் - கொடிகாமம், அத்தியார் இந்துக்கல்லூரி - நீர்வேலி, சோமஸ்கந்தா கல்லூரி - புத்தூர், மத்திய கல்லூரி - நெல்லியடி, டஸ்தரிப்பு நிலையம் - பருத்தித்துறை, அம்மன் கோவில் வீதி - வல்வெட்டித்துறை, தொழில்நுட்பக் கல்லூரி - கொக்குவில்.

குறிப்பு: நிகழ்ச்சி நடைபெறும் தினங்கள் தொடர்ச்சியாக பத்திரிகைகள், வானொலி, ஒலிபெருக்கி மூலம் அறியத்தரப்படும்.

செஞ்சோலை நிர்வாகத்தினர்

(சி 6377)

## வரி விளம்பரம்

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவும், மாணவர்களுக்கு விசேட சலுகையும்வழங்கப்படும். 'சோபிதா' புத்தகசாலை. இல. 363, காங்கேசன்துறை வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (எ-2106)

### CONSTRUCTION CONTRACTORS

Construction Contractors from the districts Jaffna, Kilinochchi, Mullaitivu & Mannar affected by the stoppage of their Contracts with the state since July 1990 are advised to Contact early. Kanagsco Developments, Builders Consultants, 639, Navalar Road, Nallur, Jaffna. (C 6371)

### நாடகநூல்கள்

200க்கும் அதிகமான வானொலி நாடகங்களும், 22 மேடை நாடகங்களும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள். கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- 19 நாடகங்கள். (சி-6370)


## பீரங்கி தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

கீரிமலை - சேந்தான்குளம் கடல் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் கடற்படையினரால் கரையோரப் பகுதிகளை நோக்கி அடிக்கடி பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இளவாலை போயிட்டி என்னுமிடத்தைச் சேர்ந்த வீடு ஒன்றில் கடற்படையினரால் ஏவப்பட்ட பீரங்கி விழுந்து வெடித்ததில் திருமதி புஷ்பராணி செபஸ்தியாம்பிள்ளை என்பவர் காயமடைந்தார். (72)

இன்று

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

'திருமலை நட்சத்திரங்கள்' நடாத்தும் 7 பேர்கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாம் அரையிறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இவ் அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங் - ஹென்றீஸ் அணி மோதும். இதற்கு முன் 3 மணிக்கு நடைபெறும் சண்காட்சி உதைபந்தாட்டத்தில் திருமலை நட்சத்திரங்கள் அணி யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அணியுடன் மோதும். (ஒ)

## பீரங்கி தாக்குதல் மெய்வல்லுநர் போட்டி

## அம்பனைக் கொத்தணி தொடர்ந்து சாதனை

(யாழ்ப்பாணம்)

சுளிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் கடந்த 27ம் திகதி நடைபெற்ற பண்டத்தரிப்பு கோட்டக் கொத்தணிகளுக்கிடையேயான மெய்வல்லுனர் போட்டியில் அம்பனைக்கொத்தணி 302 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

தொடர்ந்து நான்காவது முறை அம்பனை கொத்தணி முதலாம் இடத்தைப்பெற்று சாதனையுரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மகாஜனா கல்லூரி மாணவர்கள் செல்வன் எஸ் திலகராஜ், செல்வன் எஸ் சுகிர்தன் ஆகியோர் சாம்பியன்களாக தெரிவகினர்கள்.

அம்பனை கொத்தணியின் வெற்றிக்கு மகாஜனாக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் ம. வி, கீரிமலை நகுலேஸ்வரா ம. வி. மாணவிகள் ஒன்றிணைந்து செயற்பட்டதும், குறிப்பிடத்தக்கது. (சி-139)

## இன்று

(யாழ்ப்பாணம்)

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தினல் நாதஸ்வர மேதை திரு எம். பஞ்சாபிகேசனுக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் இன்று 1ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் தலைமையில் பாராட்டு விழா நடைபெறும்.

0 0 0

(உடுப்பிட்டி)

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று 1-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (150)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டத்தில் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களுக்கும், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து இயக்குநர்களும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களும் தவறாது வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கொத்தலாவல காலமானார்

(கொழும்பு)

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜே. சி. ரி. கொத்தலாவல நேற்று முன்தினம் காலமானார்.

இவர் பதுளை நாடாளுமன்ற உறுப்பினராகவும், இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவராகவும் முன்பு பணிபுரிந்துள்ளார். இவர் 1975-1977 வரை இலங்கை போக்குவரத்து சபையின் தலைவராகவும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## பரீட்சை ஒழுங்குகள்

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை 1992க்கான பரீட்சை நிலையங்கள் ஒதுக்கீடுகள் சம்பந்தமாக யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை க. பொ. த. உயர்தரம் 91க்கான விடைத்தாள்கள் திருத்தும் வேலை கொழும்பில் கடந்த 27ம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருவதாக யாழ். கல்விப்பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் தெரிவித்தார். (சு)

அபிவிருத்தி

## சங்கங்கள் புனரமைப்பு

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களும் மாதர் கிராம அபிவித்திச் சங்கங்களும் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான அண்மையில் வெளியிடப்பட்ட புதிய உபவிதிகள் இன்னும் தங்கள் அலுவலகத்திற்கு வந்துசேரவில்லை என்றும், இந்த உபவிதிகள் கிடைத்ததும் இச்சங்கள் புனரமைப்பு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (72)

## புலமைப்பரிசில் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை 1992க்கான விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி ஜூன் மாதம் 30ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்கள் பாடசாலைகளுக்கு யாழ். கல்வித்திணைக்களத்தினால் விரைவில் அறிவிக்கப்படும் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [சு]

முல்லையில்

## மீனவர் மீது தாக்குதல் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வலையன் மடம் கடற்பரப்பில் கடந்த வியாழக்கிழமை 11 மணியளவில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர் படகினை நோக்கி கடற்பகுதியில் வந்துகொண்டிருந்த கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்

இத்தாக்குதலில் மீன்பிடிப் படகிலிருந்தவர்களில் மூவர் படுகாயமடைந்த நிலையில் தப்பி வந்தனர். படகு கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

வைரய்யா சந்தசாமி (31-வயது, புத்தளம்), ஆண்டியப்பன் நல்லநாதன் (32-வயது, உடப்பு, புத்தளம்), சம்மாட்டி கதிர்காமு (2-வயது, புத்தளம் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (56)


## வொண்டலேற் சலவைப் பவுடர்

யாழ்ப்பாண நீருக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டது.

**வொண்டலேற் சோப்பவுடர் மட்டுமே!**

எம்மிடம்

**தலையணைப் பஞ்சு - நுளம்புத்திரி**

இவைகளை

மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு கொடுக்கப்படும்.

**புஸ்பா அன் கம்பனி,**

**293, மானிப்பாய் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

(எ-2179)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

அருளம்மா அந்தோனிப்பிள்ளை

தோற்றம்: 16-05-1921

மறைவு: 01-6-1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எங்களை எல்லாம் இந்நிலைக்கு ஆளாக்கிய அம்மா! ஆண்டுகள் மூன்றானாலும் உங்கள் மறைவை மறக்கமுடியாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:

கணவன், பிள்ளைகள்,

மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6339)

## இராசிபலன்

01 06-1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு வைகாசி 19)

அமாவாசை மு. ப. 10-10 வரை. ரோகினி மு. இ 8-55 வரை அமிர்தயோகம் இராகு காலம் காலை 7-22 முதல் 8-52 வரை சுபநேரம் காலை 11-52 முதல் 1-52வரை.

மேஷம்: புத்திரர் விரோதம். பணசெலவு மனச்சுமை,

இடபம்: ஜனசேர்க்கை, சத்ருஜயம், காரியசித்தி.

மிதுனம்: தொழில் கஷ்டம். குடும்ப சஞ்சலம், வேதனை.

கடகம்: அதிகாரம், மனமகிழ்ச்சி. இனசன வருகை.

சிங்கம்: சுபகாரியம். வசதியான மாற்றம். பணவரவு.

கன்னி: இறை உணர்வு. அயலவர் சச்சரவு, காரிய தாமதம்.

துலாம்: அடிமை நிலை. ஆணவபோக்கு, அலைச்சல்.

விருச்சிகம்: உயர்ந்த புகழ், பெண் லாபம். குடும்ப சுகம்.

தனுசு; தொழில் சிறப்பு, பணமுடை, மனப்போராட்டம்,

மகரம்; அதிகாரிகள் சஞ்சலம், வேலைப்பளு, கவலை.

கும்பம்: பிதா துன்பம், கெட்ட கனவு, பயணக்கஷ்டம்,

மீனம்: காரிய விக்கினம், குடும்ப பிரிவு. வாக்கு கலகம்.

— ஜோஸ்யர்


## இசைமாலை நிகழ்ச்சி

எதிர்வரும் 15.06.92 முதல்

தொடர்ந்து நடைபெறவுள்ளது.

செஞ்சோலைக்குழந்தைகளும், போராளிகளும்

இணைந்து வழங்கும்

சப்தஸ்வராவின்

## "இசை மாலை"

## நிகழ்ச்சி

நிகழ்ச்சி பின்வரும் இடங்களில் நடைபெறும்

இராமநாதன் கல்லூரி - மருதனமடம், சென்ஜோன்ஸ் கல்லூரி - சுண்டுக்குளி, கைலாசபதி கலை அரங்கு - யாழ். பல்கலைக்கழகம், காசிப்பிள்ளை அரங்கு - அரியாலை, இந்துக்கல்லூரி - சாவகச்சேரி, மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு, ஸ்கந்தவரோதயா கல்லூரி - கந்தரோடை, சைவப்பிரகாச வித்தியாசாலை - உரும்பிராய், சிவப்பிரகாச வித்தியாசாலை - சங்கானை திருநாவுக்கரசு வித்தியாலயம் - கொடிகாமம், அத்தியார் இந்துக்கல்லூரி - நீர்வேலி, சோமஸ்கந்தா கல்லூரி - புத்தூர், மத்திய கல்லூரி - நெல்லியடி, டஸ்தரிப்பு நிலையம் - பருத்தித்துறை, அம்மன் கோவில் - வல்வெட்டித்துறை, தொழில்நுட்பக் கல்லூரி - கொக்குவில்.

குறிப்பு: நிகழ்ச்சி நடைபெறும் தினங்கள் தொடர்ச்சியாக பத்திரிகைகள், வானொலி, ஒலிபெருக்கி மூலம் அறியத்தரப்படும்.

செஞ்சோலை நிர்வாகத்தினர்

(சி 6377)

# தமிழகத்தில் புலிகள் ஊடுருவல்?

[சென்னை]

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

வெடிகுண்டு, கண்ணிவெடி நிபுணரான விநோதன் என்பவர் தமிழகத்திற்கு தற்பொழுது வந்திருப்பதாகவும், இவரைத்தொடர்ந்து மேலும்பலர் ஊடுருவலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழக மீட்புப்படை உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதற்காக அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்குச் செல்லும் வழியிலேயே அவர் தமிழகம் வந்திருப்பதாக அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மகாகும்பாபிஷேகம்

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் - பருளாய் ஈஸ்வர விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (72)

## 60 பேர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தல்களும் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நேற்றுக்காலையிலிருந்து மாலை வரை மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களில் 60 பேர் படுகாயமடைந்தனர். நான்கு பேர் உயிரிழந்தனர்.

நேற்று படையினர் மேற்கொண்ட இராணுவநடவடிக்கைகளில் 50க்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன.

ஆயிரக்கணக்கான மக்கள் தெல்லிப்பளை, மல்லாகம், துர்க்காபுரம் சுன்னாகம், அளவெட்டி, கொல்லங்கலட்டிப் பகுதியிலிருந்து வெளியேறி உரும்பராய், சங்கானை, நவாலி, சண்டிலிப்பாய்ப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். (56)

## யாழ்நகர் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி

னர்.

மண்டைதீவு இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்கள், சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியிலும் மக்கள் கையில் அகப்பட்ட பொருட்களுடன் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடிய காட்சி மிகவும் பரிதாபமாக இருந்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்தபடியால், இப்பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் ஆரம்பமாக இருந்த ஆராதனைகள் அனைத்தும் தாமதமாகவே ஆரம்பமாகின.

காலை 7–15 மணியளவில் மண்டைதீவு இராணுவம் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின்போது, ஊர்காவற்றுறை, சாரைநகர் பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரும், கொட்டடி, நாவாந்துறைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொண்டதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## அனுரா சந்திரிகா

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

16 மாகாண சபை உறுப்பினர்களும் கட்சியில் சேர்ந்தார்கள்.

மாகாண சபை உறுப்பினர் பதவியை சட்டரீதியாக காப்பாற்றும் முகமாக ஐக்கிய சோசலிச முன்னணியில் இந்த 16 பேரும் அங்கத்தவராகவும் இருக்கிறார்கள்.

16 மாகாண சபை உறுப்பினர்களும் தமது பதவியை விட்டு விலகி சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேரவேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா இவர்களைக் கேட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து திருமதி சந்திரிகாவுக்கும், அநுராவுக்கும் இடையில் ஏற்கனவே இருந்த பூசல் மேலும் வளர்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகவிருந்த யாழ். மாவட்டச் சாரணர்களின் சேவை வாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்படி சேவை வாரம், சாரணீயச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கான விசேட கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்றுபிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

# படையினரால் வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 28ம் திகதி இடைக்காட்டுப் பகுதிக்கு வந்த படையினர், அப்பகுதியில் உள்ள பல வீடுகளைச் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

இடைக்காட்டுக்கு பீரங்கி வாகனத்துடன் வந்த படையினரின் சிதைந்து, உருக்குலைந்த சடலங்கள் மூன்று காணப்படுகின்றன.

பொதுமக்கள் 500 ரவைகளைக் கொண்ட தோட்டாக்கூடு ஒன்றைக் கண்டெடுத்து, விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இடைக்காடு செம்பிகலட்டியில் உள்ள சிதம்பரப்பிள்ளை நடராசா, நடேசு முரளிதரன்–சிவஞானம், ஸ்ரீகாந்தன், கே. கந்தசாமி ஆகியோரின் வீடு உட்பட 10 பேரின் வீடுகளைப் படையினர் சேதப்படுத்தியுள்ளனர். (56)

## ஹெலியிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

நவிலையா குணசிங்கம் (48 வயது) கோண்டாவில், தங்கவேல் லக்ஷ்மன் (12 வயது) கே. கே. எஸ். வீதி தாவடி, செல்வி சசி நவநீதகிருஷ்ணன் (23 வயது) கோண்டாவில் மேற்கு ஆகியோரே பலத்த காயங்களுக்கு உள்ளானவர்களாவர்.

ஹெலிகொப்டர் அப்பகுதியில் 15 நிமிடம் வரை வட்டமிட்டுக் கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. (56)

## விமானங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது. வாகனங்களை மட்டுமின்றி சைக்கிளில் சென்றோரையும் பாதசாரிகளையும் கூட ஹெலி தாக்கியது.

காலை 10 மணியளவில் வலிகாமம் வடக்குப் பகுதியை வட்டமிட்ட அவ்ரோ விமானமொன்று தெல்லிப்பளை மல்லாகம் பகுதியில் 3 குண்டுகளை வீசியது. பின்னர் சுன்னாகம் சந்திக்குச் சமீபமாகவும் குண்டு ஒன்றை வீசியது.

மீண்டும் நண்பகல் 12 மணியளவில் வந்த அவ்ரோ தெல்லிப்பளை, அம்பனை, மல்லாகம் பகுதிகளில் குண்டுகளை வீசியது பிற்பகல் 2 மணியளவில் இப்பகுதியை வட்டமிட்ட பொம்பர் ஒன்று மருதனார்மடத்தில் குண்டு ஒன்றை வீசியது அது தோட்ட வெளியில் விழுந்து வெடித்தது.

சுன்னாகத்தில் வீசப்பட்ட மூன்று குண்டுகளில் ஒரு பெண்மணி உயிரிழந்தார். பத்துக்கு மேற்பட்ட கடைகள் சேதமடைந்தன.

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் முன்னால் வீழ்ந்த குண்டு வெடிக்காமல் காணப்பட்டது.

காங்கேசன்துறைவீதியில் உள்ள கடை ஒன்றின் பின்புறமாக உள்ள வீட்டில் குண்டு வீழ்ந்து வீடு முற்றாக சேதமடைந்ததுடன் கடையும் புத்தகநிலையம் ஒன்றும் அச்சுக்கூடம் ஒன்றும் முற்றாக சேதமடைந்தன. (109-86)

## வலி வடக்கில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படையினருக்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்கள் மூலம் குண்டுத் தாக்குதல்களும் மறுபுறத்திலிருந்து ஷெல்த் தாக்குதல்களும் கடல் பகுதியிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

படையினர் பல தடவைகள் கனரக வாகனங்கள், பீரங்கிகள், பவள் வாகனங்களுடன் அணி அணியாக முன்னேற முயன்றதாகவும், புலிகள் மூன்று முனைகளிலிருந்து இவர்களை மறைவிடாது, சளைக்காமல் கடும் சமர் புரிந்துகொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று மாலை கிடைத்த செய்திகளின்படி, படையினர் நிலை குலைந்து, தாக்குதல்களைச் சமாளிக்கமுடியாத நிலையில் இருந்ததாகவும் தெரியவருகிறது. (56)

## தெல்லிப்பளை

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

புரத்தைச் சேர்ந்த வேலவன் உதயகுமார் (10 வயது), ஐயன் சின்னவன் (75 வயது) ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு:

இராமச்சந்திரன் திலகவதி (42 வயது), இராமச்சந்திரன் றஜிதா [17 வயது], இராமச்சந்திரன் றஞ்சனி (14 வயது) கார்த்திகேசு சண்மணி (70 வயது] இராசசுந்தரம் இராசசூரியர் (58 வயது) இராசசூரியர் பிராசக்தி (39 வயது) இராசசூரியர் பிரார்த்தனு (2 1/2 வயது] சின்னத்தம்பி செல்வரட்ணம் (38 வயது) கதிரன்துரைசிங்கம்(33 வயது) சின்னப்பொடி ஐயம்பிள்ளை (85 வயது) சிங்கராயர் சந்திரன் [26 வயது) கருணைரமேஸ் (20 வயது) திருமதி சரஸ்வதி நவரட்ணம் (40 வயது), செல்லையா நாகம்மா (65வயது), மேனகா ஆறுமுகம் (12 வயது) எஸ். ரஞ்சனி (18 வயது)

துர்க்கையம்மன் ஆலய கோபுரத்தின் மீது முதலில் மூன்று குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. உட்பகுதியில் ஒரு குண்டும், முன்வீதியில் இரு குண்டுகளும் வீழ்ந்து வெடித்தன.

கோபுரம், நித்திய மண்டபம். மடப்பள்ளி, வீதிச்சுவர் விக்கிரகங்கள், உள்மண்டபம் கொடிக்தம்பம், ஆலய மணிகள் சேதமாகின, தேரும் சேதமாகியுள்ளன.

## அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ்

# இலங்கை அரச அதிகாரிகள் பாதுகாப்பு பெறுகின்றனர்

(வாஷிங்டன்)

தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அவசரகால சட்ட விதிகளின் கீழ், அரசு அதிகாரிகள் பாதுகாப்பு பெறுவதோடு அந்தச் சட்ட குடை நிழலில் பாதுகாப்போடு குளிர் காய்ந்த வண்ணம் மனித உரிமை மீறல்களை புரிந்த வண்ணம் இருக்கிறார்கள் என்று வாஷிங்டனில் தலைமையகத்தை கொண்ட மனித உரிமை மீறல்களை கவனிக்கும் அமைப்பான 'ஏசியா வாச்'' தெரிவித்துள்ளது.

அதன் அறிக்கையில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்பற்றி மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இன்றும் கூட மனித உரிமை மீறல் முறைப்பாடுகள் எவர் செவியிலும் ஏறுவதில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் நெருக்குதலைத்தொடர்ந்து இலங்கை அரசு பாதுகாப்பு நடவடிக்கை பிரிவுகளை ஏற்படுத்தியது, இருந்தும் கூட இன்றும் பாதுகாப்பு படைகள் கைதுசெய்வதை பதிவேட்டில் பதியாது விடலாம், பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கலாம், அங்கு சித்திரவதைகள் பழகிப்போன சாதாரண நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. இதையிட்டு மனிதஉரிமை அமைப்புகள் வருந்துகின்றன.

கடந்த ஆண்டு ஐ. நா. பணிக்குழு ஒன்று அறிக்கை வெளியிட்டது

அதில் 1983இல் இருந்து 12 ஆயிரம் பேரைக் காணவில்லை என்றும் இதற்கு பாதுகாப்புபடைகளே பொறுப்பு என்றும் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு தொகையினர் காணாமல் போனது பற்றி தங்கள் ஆய்வில் தெரிவிக்கப்படவில்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்தது.

தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டம், இலங்கை அரசுக்குத் துணைபோவதாக உள்ளது. அனைத்துலக மனித உரிமைச் சாசனங்களை உதாசீனம் செய்ய உதவி புரிகின்றன.

பாதிக்கப்பட்டோர், அரசு அதிகாரிகளிடம் இருந்து நஷ்டஈடு பெற இச்சட்டம் தடையாகவும் உள்ளது [க)

# யாழ். நகர் தாக்குதலில் காயமடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா படையினரால் யாழ். குடாநாட்டின் மீது நேற்றுமேற்கொண்ட'ஷெல்' தாக்குதலில் ஷெல்கள் பல பகுதிகளில் விழுந்து வெடித்தன. பல பேர் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

யாழ். மனோகரா தியேட்டருக்கு அப்பால் காங்கேசன்துறை வீதியில் ஈ. கே. ரி. தங்கராசா என்பவரின் வீட்டில் வீழ்ந்த 'ஷெல்' வீட்டை பலத்த சேதமாக்கியதுடன், ஈ. கே. ரி. தங்கராசா (வயது 60), மனைவி இராசலெட்சுமி (48 வயது) பிள்ளைகளான சிவசுதன் (வயது 18) சிவதர்சினி (வயது 17) ஆகியோர் காயமுற்றனர். சிவசுதனுக்கு பலத்தகாயம் ஏற்பட்டுள்ளதாக அறியக்கிடக்கின்றது.

ஏ. வி. எம். போட்டோ உரிமையாளர் ஏ. வி. நாகலிங்கம் என்பவரின் வீட்டில் விழுந்த ஷெல, வீட்டின் புகைக்கூட்டில் விழுந்தபடியால் வீடு சேதத்துக்குள்ளானது. அதிஷ்டவசமாக எவரும் காயம் அடையவில்லை. இவரின் வீடு ஈ. கே. ரி. தங்கராசாவின் வீட்டுக்கு எதிராக அமைந்துள்ளது.

மணற்தரை ஒழுங்கையில் வே சிவசுப்பிரமணியம் என்பவரின் தோட்டத்திலும் 'ஷெல்' விழுந்தது எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பாதுகாப்புக்காக நல்லூர் போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். [சு]

## இந்துசமய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டில் ஈடுபட்டிருந்த பொதுமக்களில் பலர் காயமடைந்தும், இருவர் உயிரிழந்தது குறித்தும் இந்து சமயப் பேரவை கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது.

இவ்வாறு இந்து சமயப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

வலி-வடக்குப் பிரதேசத்திலும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்கள், ஹெலித்தாக்குதல்கள் ஆகியவற்றால் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்தும், காயமடைந்தும் உள்ளனர். அநேகமான அப்பாவிப் பொதுமக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். அநாவசியமான இவ்வுயிரிழப்புகளையும் சேதங்களையும் நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

வழிபாட்டுத் தலங்கள் மீது எக்காரணம் கொண்டும் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாமென மீண்டும் கேட்டுக் கொள்கிறோம்.

## முல்லையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னேறி வந்தபோது விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பை சந்தித்ததினால் படையினர் மேலும் முன்னேற முடியாது அதே இடத்தில் தரித்து நிற்பதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி மோதலில் இராணுவத் தரப்பில் பலர் கொல்லப்பட்டதுடன், 11 போராளிகளும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர் (வி)

## இறந்த

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் இதுவரை 100க்கும் மேற்பட்ட இராணுவச் சிப்பாய்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், விமானத்தில் கொண்டுவரப்படும் இறந்த இராணுவச் சிப்பாய்களின் சடலங்கள், உடனுக்குடன் அம்புலன்ஸ் வண்டிகள் மூலம் அப்புறப்படுத்தப்படுவதாகவும் அவை எங்கு கொண்டு செல்லப்படுகின்றன என்பது யாருக்கும் தெரியாத ஒரு மர்மமாக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81